**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் திங்கள்கிழமை**
**IA. 01/2023 in O.S.32/2023**

பானுமதி . .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1) ராஜமாணிக்கம்
2) சௌந்தரநாயகி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 06.12.2023–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் M.பிரான்சிஸ்சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் இன்று கீழ்க்கண்டவாறு வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் சி.பி.சி.ஆர்டர் 39 ரூல் 1&2–ன் படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, மனு சொத்துக்களில், கண்ட 1 வது அயிட்ட சொத்துக்கு, 4 வது அயிட்ட சொத்து வழியாகவும் மனு 2–வது அயிட்ட சொத்துக்கு 3–வது அயிட்ட சொத்து வழியாகவும் மனுதாரர்க்குரிய வண்டி ஓட்டியும், ஆடு மாடுகள் ஓட்டியும், சென்று வரும் புழங்குரிமை பாத்தியத்தை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க எதிர்மனுதாரர்களுக்கெதிராக தாவா முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இம்மனு முடியும் வரை தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் உத்தரவாக வேண்டுமாய் மனுதாரர் தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் இவ்வழக்கின் வாதி என்றும், தாவா சொத்துக்களில் 1 முதல் 3

அயிட்ட சொத்துக்கள், ஆதியில் வாதியின் கணவர் ஜெகதீசனுக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களை, வாதியின் கணவரும் 1ம் எதிர்மனுதாரரும் பொதுவாக அனுபவித்து வந்து பின்னர், கடந்த 15.07.2004–ல் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினைப்படி தாவாவில் கண்ட 1–வது அயிட்ட சொத்தும், தாவாவில் கண்ட 2வது அயிட்ட சொத்து மனுதாரரின் கணவர் ஜெகதீசன் பாகத்திற்கும், தாவா 3வது அயிட்ட சொத்து 1ம் எதிர்மனுதாரரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும், தாவா 4 வது அயிட்ட சொத்து அடங்கிய சர்வே எண் 127/2 ஆதியில் பார்வதி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்ததை மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து தங்களது கீழ்புறம் உள்ள சர்வே எண் 127/3 சொத்துக்கு செல்வதற்கு பாதை தேவைப்பட்டதால், மனுதாரரிடம் ரூ.10,000/– பணத்தை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டு, மேற்கொண்டு பணம் போட்டு தனது மனைவியான 2ம் எதிர்மனுதாரர் பேரில் கிரயம் பெற்று, பின்னர் அதில் தென்புரம், தென்வடல் 14 அடியும், கீழ்மேல் 43 அடி அளவுள்ள பகுதியை மனுதாரருக்கு பாதையாக கொடுத்துவிட்டு, எஞ்சிய வடபுறப்பகுதியை, 1ம் பிரதிவாதி தனது சொத்துக்கு செல்லும் பாதையாகவும் ஒதுக்கி அனுபவம் செய்து வரப்படுகிறது என்றும், தாவா 4வது அயிட்ட சொத்தினை சர்வே எண் 127/2–ல் மனுதாரருக்கு பாதையாக ஒதுக்கியது போக எஞ்சிய வடபுறம் உள்ள சொத்தினையும் சேர்த்து தனியே காம்பவுண்ட் வைத்துக் கொண்டு 1ம் எதிர்மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார் என்றும், தாவா 1வது அயிட்ட சொத்திற்கு தாவா 4வது அயிட்ட சொத்து தவிர வேறு பாதையும் கிடையாது என்றும், தாவா 4வது அயிட்ட சொத்து வழியாக, மனுதாரர் தாவா 1வது அயிட்ட சொத்தில் உள்ள வீட்டிற்கும் அதற்கு கீழ்புறம் உள்ள தோட்டத்திற்கும் வண்டி மாடு, ஆடு ஓட்டிச்சென்று தனியே வேலி வைத்தும் அனுபவித்து வருகிறார் என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து அடங்கிய சர்வே எண்ணில் தென்புறம் 0.82½ செண்ட் மனுதாரரின் கணவருக்கும், வடபுரம் 0.87½ செண்ட் பாதைக்காக கூடுதலாக 1ம் எதிர்மனுதாரருக்கும் பாகத்தில் ஒதுக்கப்பட்டு பாக அட்டவணையிலேயே

அதற்கு வடபுறம் உள்ள பாதையிலிருந்து தென்புறமுள்ள தாவா 2வது அயிட்டத்திற்கும், அதற்கு வடபுறம் உள்ள அதே சர்வே எண்ணில் தாவா 3வது அயிட்டமான 1ம் எதிர்மனுதாரரின் 0.87½ செண்ட் சொத்து வழியாக பாதை காட்டி மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றும், அதைதவிர வேறு பாதையும், தாவா 2வது அயிட்டத்திற்கு மனுதாரருக்கு கிடையாது என்றும், தாவா 1,2 அயிட்டம் அடங்கிய சொத்து சர்வே எண்ணிற்கு ரெவன்யூவில் பட்டாவில் மனுதாரரின் கணவர் ஜெகதீசன் தந்தை செங்கமுத்து என்பதற்கு பதில் ஜெகதீசன் தந்தை ராஜமாணிக்கம் என தவறுதலாக கூட்டு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் கணவரும் இறந்து விட்ட நிலையில், மனுதாரரின் ஒரு மகனும் இறந்து விட்டதால், ஒரு மகன் வெளிநாட்டில் வேலை பார்த்தும், எந்தவித உதவியும் செய்யாததால், தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் சொற்ப விலைக்கு கேட்டும், மனுதாரர் கொடுக்காததால், மாச்சரியம் கொண்டு, 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும், மனுதாரர் இதுநாளது வரை சென்று வந்த வண்டிப்பாதை பாத்தியத்தை கடந்த 14.11.2022 மறுத்து பேசி தகராறு செய்ததை, மனுதாரர் சிரமப்பட்டு தடுத்துவிட்டு, மக்கள் குறைதீர்க்கும் நாளில் புகார் கொடுத்துள்ளார் என்றும், மீண்டும் 1ம் பிரதிவாதி கடந்த 27.12.2022–ல் ராஜேந்திரன் என்பவர் மூலம் 3வது அயிட்டத்தில் உள்ள பாதையில் ஏர் ஓட்டி பாதையை நிலமாக மாற்ற முயற்சித்ததை மனுதாரர் தடுத்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் தொடர்ந்து மனுதாரரின் பாதை பாத்தியத்தை தடுக்கவும் இடைஞ்சல் செய்யவும் முயற்சிப்பதால், மனு சொத்துக்களில், கண்ட 1வது அயிட்ட சொத்துக்கு 4வது அயிட்ட சொத்து வழியாகவும் மனு 2வது அயிட்ட சொத்துக்கு 3வது அயிட்ட சொத்து வழியாகவும் மனுதாரர்க்குரிய வண்டி ஓட்டியும், ஆடு மாடுகள் ஓட்டியும், சென்று வரும் புழங்குரிமை பாத்தியத்தை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க எதிர்மனுதாரர்களுக்கெதிராக தாவா முடியும் வரை இடைக்கால

உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இம்மனு முடியும் வரை தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்களின் எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனுவில் கண்டுள்ள விபரங்கள் சரியல்ல என்றும், சர்வே எண் 127-3 0.10 செண்டும் சர்வே எண் 127-4 ல் 6 செண்டும் வாதியின் கணவர் ஜெகதீசன் மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பன் செங்கமுத்து என்பவருக்கு அருவடைய தகப்பன் வத்த படையாட்சியிடம் இருந்து கிடைத்த பூர்வீக சொத்து என்றும், சர்வே எண் 127-2 என்பது குடும்பத்துக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், வத்த படையாட்சியும், அவருடைய மகன் செங்கமுத்துவும் சர்வே எண் 127-3, 127-4 இவைகளை அடைவதற்கு கீழ்புறமுள்ள வீதியிலிருந்து செங்கமுத்துவின் சகோதரன் துரைசாமி மகன் சாமிதுரையின் மனையின் தென்புற கடைசியில் கிழக்கு நோக்கி நுழைந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், இது தான் ஆதி காலம் முதல் புழங்கி வரும் பாதை என்றும், இந்த பாதை பிரதிவாதிகளின் வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், செங்கமுத்து இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான அவருடைய மனைவி தையலை அம்மாள், மற்றும் மகன்களான 1ம் பிரதிவாதி ராஜமாணிக்கம், ஜெகதீசன் ஆகிய மூவருக்குள் 15.07.2004 ல் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாக பத்திரப்படி, சர்வே எண் 127-3 0.10 செண்டில் வடபுறம் 6½ செண்டு 1ம் பிரதிவாதிக்கும், தென்புறம் 0.3½ செண்டு ஜெகதீசனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், அதற்கு தென்புறமுள்ள சர்வே எண் 127-4 ல் 3½ செண்டு ஒட்டி தென்புறம் 0.3 செண்டு ஜெகதீசனுக்கும், ஜெகதீசன் பாகத்துக்கு மேல்புறம் 0.03 செண்டு தாய் தையலை அம்மாளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், ஜெகதீசனும், 1ம் பிரதிவாதி ராஜமாணிக்கமும் சர்வே எண் 127-3 மற்றும் சர்வே எண் 127-4 ல் உள்ள அவர்கள் பாகத்துக்கு செல்ல தென்வடல் வீதியிலிருந்து சாமிதுரை மனையின் தென்புற கடைசியில் கிழக்கு நோக்கி நுழைந்து தாய் தையலை அம்மாளின் பாக

மனையின் வழியாக வடக்கு நோக்கி திரும்பி அவரவர் பாக சொத்துக்களை அனுபவித்து வந்துள்ளார்கள் என்றும், பாதையை தான் வாதியின் கணவரான ஜெகதீசன் தனது ஆயுட் காலம் வரை பயன்படுத்தி வந்தார் என்றும், அவர் இறந்த பிறகு வாதி உள்ளிட்ட அவரது வாரிசுகளும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் சர்வே எண் 127-2ன் வழியாக வாதியோ அல்லது அவரது கணவர் ஜெகதீசனோ ஒருநாளும் சென்று வந்ததில்லை என்றும், இதனை பாதையாக பயன்படுத்தியதும் இல்லை என்றும், எனவே தாவா 4வது அயிட்ட சொத்தில் வாதிக்கு பாதை பாத்தியம் எதுவும் இல்லை என்றும், வாதி தாவா 4வது அயிட்ட சொத்தில் சொந்த பாத்தியமும் உள்ளதாக சொல்லி இருப்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிக்கு பாதை பாத்தியம் என்பது சாமிதுரையின் மனையின் வழியாக மட்டுமே உள்ளது என்றும், 15.07.2004 தேதிய பாகப்பத்திரத்தில் ஜெகதீசன் பாகம் 0.87½ செண்டுக்கு ராஜமாணிக்கம் நிலத்தின் வழியாக நடந்து கொள்ள வேண்டியது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும், அதாவது 1ம் பிரதிவாதியின் பாக நிலத்தின் வழியாக மனிதர்கள் நடந்து கொள்ள வேண்டியதற்காக ஜெகதீசனுக்கு 3 அடி அகலமுள்ள பாதை பாத்தியம் உள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும் அதேபோன்று பாகப்பிரிவினை தேதி முதல் ஜெகதீசன் ஆயுள்காலம் வரை 3 அடி அகலமுள்ள இடத்தை மட்டுமே பாதையாக பயன்படுத்தி புழங்கி வந்தார் என்றும், அதற்கு மாறாக, வாதியின் கணவர் இறந்த பிறகு 3 அடி பாதைக்கு பதிலாக 10 அடி சேர்த்து 13 அடி பாதையாக வழக்குரையில் கேட்டிருப்பது சரியல்ல என்றும், 3 அடி அகலத்துக்கு அதிகமாக ஜெகதீசன் பயன்படுத்தியதில்லை என்றும், அதனால் வாதிக்கு சர்வே எண் 158-2ல் 3 அடி அகலத்துக்கு மேல் பாதை பாத்தியம் இல்லை என்றும் எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதார்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இவ்வெதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சானறாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**<u>6) பிரச்சனைக்கான தீர்வு:-</u>**

மனுதாரர் தரப்பு வாதத்தில் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு தாவா 4வது அயிட்ட சொத்து தவிர வேறு பாதையும் கிடையாது என்றும், தாவா 4வது அயிட்ட சொத்து வழியாக, மனுதாரர் தாவா 1வது அயிட்ட சொத்தில் உள்ள வீட்டிற்கும் அதற்கு கீழ்புறம் உள்ள தோட்டத்திற்கும் வண்டி மாடு, ஆடு ஓட்டிச்சென்று தனியே வேலி வைத்தும் அனுபவித்து வருகிறார் என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து அடங்கிய சர்வே எண்ணில் தென்புறம் 0.82½ செண்ட் மனுதாரரின் கணவருக்கும், வடபுரம் 0.87½ செண்ட் பாதைக்காக கூடுதலாக 1ம் எதிர்மனுதாரருக்கும் பாகத்தில் ஒதுக்கப்பட்டு பாக அட்டவணையிலேயே அதற்கு வடபுறம் உள்ள பாதையிலிருந்து தென்புறமுள்ள தாவா 2வது அயிட்டத்திற்கும், அதற்கு வடபுறம் உள்ள அதே சர்வே எண்ணில் தாவா 3வது அயிட்டமான 1ம் எதிர்மனுதாரரின் 0.87½ செண்ட் சொத்து வழியாக பாதை காட்டி மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றும், அதைதவிர வேறு பாதையும், தாவா 2வது அயிட்டத்திற்கு மனுதாரருக்கு கிடையாது என்றும், தாவா 1,2 அயிட்டம் அடங்கிய சொத்து சர்வே எண்ணிற்கு ரெவன்யூவில் பட்டாவில் மனுதாரரின் கணவர் ஜெகதீசன் தந்தை செங்கமுத்து என்பதற்கு பதில் ஜெகதீசன் தந்தை ராஜமாணிக்கம் என தவறுதலாக கூட்டு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் கணவரும் இறந்து விட்ட நிலையில், மனுதாரரின் ஒரு மகனும் இறந்து விட்டதால், ஒரு மகன் வெளிநாட்டில் வேலை பார்த்தும், எந்தவித உதவியும் செய்யாததால், தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் சொற்ப விலைக்கு கேட்டும், மனுதாரர் கொடுக்காததால், மாச்சரியம் கொண்டு, 1ம் எதிர்மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரரும், மனுதாரர் இதுநாளது வரை சென்று வந்த வண்டிப்பாதை பாத்தியத்தை கடந்த 14.11.2022 மறுத்து பேசி தகராறு செய்ததை, மனுதாரர் சிரமப்பட்டு தடுத்துவிட்டு, மக்கள் குறைதீர்க்கும் நாளில் புகார் கொடுத்துள்ளார்

என்றும், மீண்டும் 1ம் பிரதிவாதி கடந்த 27.12.2022–ல் ராஜேந்திரன் என்பவர் மூலம் 3வது அயிட்டத்தில் உள்ள பாதையில் ஏர் ஓட்டி பாதையை நிலமாக மாற்ற முயற்சித்ததை மனுதாரர் தடுத்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் தொடர்ந்து மனுதாரரின் பாதை பாத்தியத்தை தடுக்கவும் இடைஞ்சல் செய்யவும் முயற்சிப்பதால், மனு சொத்துக்களில், கண்ட 1வது அயிட்ட சொத்துக்கு 4வது அயிட்ட சொத்து வழியாகவும் மனு 2வது அயிட்ட சொத்துக்கு 3வது அயிட்ட சொத்து வழியாகவும் மனுதாரர்க்குரிய வண்டி ஓட்டியும், ஆடு மாடுகள் ஓட்டியும், சென்று வரும் புழங்குரிமை பாத்தியத்தை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ அல்லது ஏஜண்டுகளோ எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க எதிர்மனுதாரர்களுக்கெதிராக தாவா முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இம்மனு முடியும் வரை தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தில் சர்வே எண் 127–3 0.10 செண்டும் சர்வே எண் 127–4ல் 6 செண்டும் வாதியின் கணவர் ஜெகதீசன் மற்றும் 1ம் பிரதிவாதியின் தகப்பன் செங்கமுத்து என்பவருக்கு அருவடைய தகப்பன் வத்த படையாட்சியிடம் இருந்து கிடைத்த பூர்வீக சொத்து என்றும், சர்வே எண் 127–2 என்பது குடும்பத்துக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், வத்த படையாட்சியும், அவருடைய மகன் செங்கமுத்துவும் சர்வே எண் 127–3, 127–4 இவைகளை அடைவதற்கு கீழ்புறமுள்ள வீதியிலிருந்து செங்கமுத்துவின் சகோதரன் துரைசாமி மகன் சாமிதுரையின் மனையின் தென்புற கடைசியில் கிழக்கு நோக்கி நுழைந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், இது தான் ஆதி காலம் முதல் புழங்கி வரும் பாதை என்றும், இந்த பாதை பிரதிவாதிகளின் வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், செங்கமுத்து இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான அவருடைய மனைவி தையலை அம்மாள், மற்றும் மகன்களான 1ம் பிரதிவாதி ராஜமாணிக்கம், ஜெகதீசன் ஆகிய

மூவருக்குள் 15.07.2004 ல் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாக பத்திரப்படி, சர்வே எண் 127−3 0.10 செண்டில் வடபுறம் 6½ செண்டு 1 ம் பிரதிவாதிக்கும், தென்புறம் 0.3½ செண்டு ஜெகதீசனுக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், அதற்கு தென்புறமுள்ள சர்வே எண் 127−4 ல் 3½ செண்டு ஒட்டி தென்புறம் 0.3 செண்டு ஜெகதீசனுக்கும், ஜெகதீசன் பாகத்துக்கு மேல்புறம் 0.03 செண்டு தாய் தையலை அம்மாளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், ஜெகதீசனும், 1 ம் பிரதிவாதி ராஜமாணிக்கமும் சர்வே எண் 127−3 மற்றும் சர்வே எண் 127−4 ல் உள்ள அவர்கள் பாகத்துக்கு செல்ல தென்வடல் வீதியிலிருந்து சாமிதுரை மனையின் தென்புற கடைசியில் கிழக்கு நோக்கி நுழைந்து தாய் தையலை அம்மாளின் பாக மனையின் வழியாக வடக்கு நோக்கி திரும்பி அவரவர் பாக சொத்துக்களை அனுபவித்து வந்துள்ளார்கள் என்றும், பாதையை தான் வாதியின் கணவரான ஜெகதீசன் தனது ஆயுட் காலம் வரை பயன்படுத்தி வந்தார் என்றும், அவர் இறந்த பிறகு வாதி உள்ளிட்ட அவரது வாரிசுகளும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் சர்வே எண் 127−2 ன் வழியாக வாதியோ அல்லது அவரது கணவர் ஜெகதீசனோ ஒருநாளும் சென்று வந்ததில்லை என்றும், இதனை பாதையாக பயன்படுத்தியதும் இல்லை என்றும், எனவே தாவா 4 வது அயிட்ட சொத்தில் வாதிக்கு பாதை பாத்தியம் எதுவும் இல்லை என்றும், வாதி தாவா 4 வது அயிட்ட சொத்தில் சொந்த பாத்தியமும் உள்ளதாக சொல்லி இருப்பதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் வாதிக்கு பாதை பாத்தியம் என்பது சாமிதுரையின் மனையின் வழியாக மட்டுமே உள்ளது என்றும், எனவே மனுதாரரின் மனு தள்ளுப்படிக்குரியது என்றும் வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

8) இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்துப்பார்க்கும்போது, மனுதாரர் மனுவில் தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு தாவா 4 வது அயிட்ட சொத்து தவிர வேறு பாதையும் கிடையாது என்றும், தாவா 4 வது அயிட்ட சொத்து வழியாக, மனுதாரர் தாவா 1 வது அயிட்ட சொத்தில் உள்ள வீட்டிற்கும் அதற்கு கீழ்புறம் உள்ள தோட்டத்திற்கும் வண்டி மாடு, ஆடு ஓட்டிச்சென்று தனியே வேலி வைத்தும் அனுபவித்து வருகிறார் என்றும், தாவா 2 வது அயிட்ட சொத்து

அடங்கிய சர்வே எண்ணில் தென்புறம் 0.82½ செண்ட் மனுதாரரின் கணவருக்கும், வடபுரம் 0.87½ செண்ட் பாதைக்காக கூடுதலாக 1ம் எதிர்மனுதாரருக்கும் பாகத்தில் ஒதுக்கப்பட்டு பாக அட்டவணையிலேயே அதற்கு வடபுறம் உள்ள பாதையிலிருந்து தென்புறமுள்ள தாவா 2வது அயிட்டத்திற்கும், அதற்கு வடபுறம் உள்ள அதே சர்வே எண்ணில் தாவா 3வது அயிட்டமான 1ம் எதிர்மனுதாரரின் 0.87½ செண்ட் சொத்து வழியாக பாதை காட்டி மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றும், அதைதவிர வேறு பாதையும், தாவா 2வது அயிட்டத்திற்கு மனுதாரருக்கு கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

9. மேற்படி அதனை மறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையில் 15.07.2004 தேதிய பாகப்பத்திரத்தில் ஜெகதீசன் பாகம் 0.87½ செண்டுக்கு ராஜமாணிக்கம் நிலத்தின் வழியாக நடந்து கொள்ள வேண்டியது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும், அதாவது 1ம் பிரதிவாதியின் பாக நிலத்தின் வழியாக மனிதர்கள் நடந்து கொள்ள வேண்டியதற்காக ஜெகதீசனுக்கு 3 அடி அகலமுள்ள பாதை பாத்தியம் உள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்று மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

10. மேற்படி பார்க்கையில் 15.07.2004 தேதியிட்ட பாக பிரிவினை படி யார் யாருக்கு எந்த எந்தெந்த பகுதி ஒதுக்கப்பட்டு பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்பதையும், அதனப்படி யார் யார்க்கு பாதை பாத்தியம் உள்ளது என்பதையும் முதலில் பார்க்கவேண்டும், அவ்வாறு இருப்பதால் அசல் வழக்கில் இருதரப்பிலும் விசாரணை செய்து அவர்கள் மூலம் குறியீடு செய்யப்படும் ஆவணங்களை பரிசீலனை செய்த பின்பு தான் ஒரு தெளிவான முடிவு ஏற்படும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. மேலும் எதிர்மனுதாரர்களால் எவ்வகையில் மனுதாரருக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் மனுதாரர் தரப்பில் மெய்ப்பிக்கவில்லை (Prima facie Balance inconvenience Irreparable loss) என்றும், முதல் தோற்ற வழக்கும் சமச்சீர் நிலையும் மனுதாரருக்கு ஆதரவாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் மனுதாரர் அனுபவத்தில் 1ம் பிரதிவாதி கடந்த 27.12.2022ல் ராஜேந்திரன் என்பவர் மூலம் 3 வது அயிட்டத்தில் உள்ள பாதையில் ஏர் ஓட்டி பாதையை நிலமாக மாற்ற முயற்சித்ததை தடுத்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக கூறியுள்ளபோதிலும் அதனை நிரூபிக்கும் விதமாக எந்தவொரு வாய்மொழி சாட்சியத்தை முன்னிலைப்படுத்தப்படவில்லை.

12. மேலும், அசல் வழக்கானது பாதை பாத்தியத்தை விளம்புகை செய்ய கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளதால், தாவா சொத்துக்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்று அசல் வழக்கின் முழுமையான விசாரணைக்குப் பின்புதான் தெரியவரும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது, அசல் வழக்கின் விசாரணையின்போது இருதரப்பினரையும் விசாரணைக்கு உட்படுத்தி சாட்சி மற்றும் சாண்றாவணங்களின் அடிப்படையில் தீர்வினை வழங்குவதுதான் அறுதியிட்ட தீர்வாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை..

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH Digitally signed by S GANESH Date: 2024.08.12 16:23:31 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம்:

– இல்லை –

S GANESH Digitally signed by S GANESH Date: 2024.08.12 16:23:38 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.